**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**
**DEPOSITION OF WITNESS**
**SC.No.65/2024 – PW-1**

| | |
|---|---|
| Name | திருமதி.கனிமொழி |
| Husband/Father Name | ஆறுமுகம் |
| Village /Area | ஆலப்பாக்கம் |
| Taluk | நெமிலி |
| Occupation | இல்லத்தரசி |
| Age | 25 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 18.07.2025.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 09.07.2021 அன்று நான் எனது அம்மா லட்சுமி வீட்டிற்கு சென்றேன். அங்கு எனது அம்மா, அக்கா காயத்திரி, தங்கை சுவேதா ஆகியோர்கள் இருந்தோம். நான் பிரசவத்திற்காக சென்றிருந்தேன். எனது மகன் 1 முக்கால் வயதுடைய கபிலேஷ் யை எனது தாயார் நல்ல முறையில் பரமரித்து வந்ததால் அதனால் ஆஜர் எதிரிக்கு எனது தாயார் எனது மகனை மட்டுமே நன்றாக பார்த்துக்கொள்கிறார் என்ற எண்ணம் இருந்து வந்தது. சம்பவத்தன்று இரவு 08.30 மணியளவில் நான் உறங்கிக்கொண்டிருந்தேன். அப்போது திரும்பி படுக்க முற்பட்ட போது என் மகன் கபிலேஷ் மீது கட்டுக்கல் இருப்பதை பார்த்து நான் அலறினேன் அப்போது அங்கு பிரகாஷ் என்பவர் அங்கிருந்த கல்லை தூக்கினார். நான் அலறிய சத்தம் கேட்டு ராம்குமார், நீலமேகம் ஆகியோர் ஓடி வந்தார்கள். என் மகனுக்கு காதிலும் மூக்கிலும் இரத்தம் வழிந்து கொண்டே இருந்தது. பிறகு நான் உடனே அருகில் இருந்த புதுப்பட்டு அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றேன் அங்கு பரிசோதனை

செய்த மருத்துவர்கள் வாலாஜா மருத்துவமனைக்கு அழைத்து செல்ல பரிந்துரை செய்தனர். அங்கு நாங்கள் சென்ற போது பரிசோதனை செய்த மருத்துவர்கள் சிகிச்சை பலனின்றி எனது மகன் கபிலேஷ் இறந்து விட்டதாக சொன்னார்கள். பிறகு நெமிலி காவல் நிலையம் வந்து சம்பவம் குறித்து புகார் அளித்தேன். ஆஜர் எதிரி எனது சகோதரி காயத்திரியின் கணவர் ஆவார். என்னிடம் காட்டப்படும் புகார் மனு என்னால் கொடுக்கப்பட்டது தான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அது அதசா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் கட்டுக்கல் சம்பவத்தின் போது பயன்படுத்தப்பட்ட கல் தான் அது சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் பாயில் தான் நானும் எனது மகனும் சம்பவ தினத்தன்று படத்திருந்தோம் அதில் இரத்த கரை உள்ளது அந்த இரத்தம் தோய்ந்த பாய் சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் பெட்சீட் யை தான் பாயின் மேல் விரித்து எனது மகனை படுக்க வைத்திருந்தேன் அது மெருன் மற்றும் சிமெண்ட் கலர் நிறம் கொண்டது அது சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவத்தின் போது எனது மகன் கமலேஷ் அணிந்திருந்த பச்சை நிற முழுக்கை சட்டை சா.பொ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் காட்டப்பட்ட சா.பொ.1–யை தான் எதிரி சம்பவ இடத்திலிருந்து தூக்கிய கல்லாகும். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தனர். என்னிடம் காண்பிக்கப்படும் நில நிற லுங்கியையும் வெள்ளை மற்றும் கருப்பு நிற இரத்த கரை படிந்த சட்டையை தான் சம்பவ தினத்தன்று ஆஜர் எதிரி அணிந்திருந்தார் அவைகள் சா.பொ.5 மற்றும் சா.பொ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (மேற்படி சா.பொ.5 மற்றும் சா.பொ.6 ஐ குறியீடு

செய்வதற்கு சாட்சி போலீஸ் விசாரணையில் எதுவும் கூறாததால் ஆட்சேபிக்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.)

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : எதிர் தரப்பு மனுவின் பேரில் குறுக்கு விசாரணை நிறுத்திவைக்கப்படுகிறது.**

**ஒம்./—திருமதி. கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**